தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

06.10.2012 P.M

## பவானிசாகர் நீர்மட்டம்

ஈரோடு, அக். 5: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 30.15 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 86 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் விநாடிக்கு 600 கனஅடி நீர் திறந்து விடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.18 டி.எம்.சி.

## கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்

தேனி, அக். 5: தேனி ஒன்றியத்தில் உள்ள பாலகிருஷ்ணாபுரம், உத்தமபாளையம் ஒன்றியத்தில் உள்ள மல்லிங்காபுரம் ஆகிய இடங்களில் சனிக்கிழமை (அக். 6) கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கால்நடை பாதுகாப்புத் திட்ட மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

முகாமில், கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், மலடு நீக்கம், சுண்டுவாத அறுவைச் சிகிச்சை, சினைப் பரிசோதனை மற்றும் செயற்கை முறை கருவூட்டல், கோழிக் கழிசல் தடுப்பூசி சிகிச்சை அளிக்கப்படும் என்று மாவட்ட நிர்வாக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாழாக்குடி, பூதப்பாண்டியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நாளை திறப்பு

தோவாளை வட்டத்தில், தாழாக்குடி மற்றும் பூதப்பாண்டியில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமை (அக். 7) திறக்கப்பட உள்ளன.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நிகழாண்டில் தோவாளை வட்டத்தில் தாழாக்குடி, பூதப்பாண்டி ஆகிய இரு இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளன.

வனத்துறை அமைச்சர் கே.டி. பச்சைமால் இம்மாதம் 7-ம் தேதி காலை 9 மணிக்கு கொள்முதல் நிலையங்களை திறந்து வைக்கிறார்.

இந்த கொள்முதல் நிலையங்களில் சன்னரக தரம் 1 நெல்லுக்கு ஊக்கத்தொகை உள்பட குவிண்டாலுக்கு ரூ. 1350-ம், பொதுரக நெல்லுக்கு ஊக்கத் தொகையுடன் குவிண்டாலுக்கு ரூ. 1300 பெறலாம். நெல்லின் ஈரப்பதம் 17 சதவீதத்துக்கு மேல் இருக்கக் கூடாது என்றார் அவர்.

## நெல் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்க கோரிக்கை

செய்யாறு, அக். 5: டெல்டா பாசன விவசாயிகளுக்கு வழங்கப்படுவது போல் வட மாவட்ட நெல் விவசாயிகளுக்கும் ஊக்க தொகையாக ஏக்கருக்கு ரூ.1,500 வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழக உழவர் சங்கங்களின் கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம் செய்யாறில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு மாநில செய்தி தொடர்பாளர் வி.ஜி.புருஷோத்தமன் தலைமை வகித்தார். கலவை எஸ்.வேலாயுதம், வடகால் முருகன், தாமல் மணி, விழுப்புரம் ரவி நைனார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

30-வது காவிரி கண்காணிப்பு கமிட்டி கூட்டத்தை மத்திய அரசு உடனே கூட்டி, வாரம், மாதம் என்ற அடிப்படையில் காவிரியில் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய அரசு தமிழகத்தை வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும். கிணறுகளை ஆழப்படுத்த ரூ.50 ஆயிரம் வரை கடனுதவி வழங்க வேண்டும் என்று கோரும் தீர்மானங்களும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட விவசாயிகளான எஸ்.சிவலிங்கம், எம்.கோவிந்தசாமி, எஸ்.ரகுபதி, வி.எம்.குப்பன், எஸ்.சச்சிதானந்தம், ஏ.ஜெயபாலன், ஒ.மாரி, எஸ்.துரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்

## விதை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

செய்யாறு, அக். 5: செய்யாறு வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள், மானிய திட்டங்கள் மூலம் தரமான விதை உற்பத்தி செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதைகள் உற்பத்தி செய்வதற்காக இவ்வாண்டு, நெல் 30 ஹெக்டேரும், பயறு 20 ஹெக்டேரும், எண்ணெய் வித்துகள் 85 ஹெக்டேரும் பயிரிடப்பட உள்ளது என்று வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தெரிவித்துள்ளார்.

## முட்டைக் கொள்முதல் விலை மேலும் 15 காசுகள் சரிவு

நாமக்கல், அக்.5: முட்டை பண்ணைக் கொள்முதல் விலை வெள்ளிக்கிழமை மேலும் 15 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.3.25ஆக நிர்ணயிக்கப்பட்டது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. புரட்டாசி மாதம் பிறந்தது முதல் தமிழகத்தில் முட்டை நுகர்வு குறைந்தது. மேலும், வட மாநிலங்களில் நவராத்திரி விழாவைத் தொடர்ந்து தில்லி, ஹைதராபாத் மண்டலங்களிலும் முட்டை நுகர்வு குறைந்ததால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலையைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. முட்டை பண்ணைக் கொள்முதல் விலை வியாழக்கிழமை 15 காசுகள் குறைக்கப்பட்டு ரூ3.40 ஆக நிர்ணயிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பிற மண்டலங்களில் விலை நிலவரம்: சென்னை ரூ.3.45, பெங்களூர் ரூ.3.20, மைசூர் ரூ.3.20, ஹைதராபாத் ரூ.3.00, மும்பை ரூ.3.32, விஜயவாடா ரூ.3.00, கொல்கத்தா ரூ.3.31, பர்வாலா ரூ.3.15, தில்லி ரூ.3.34.

## காவிரி நீர் வந்தால்தான் சம்பா சாகுபடி: மத்தியக் குழுவிடம் விவசாயிகள் முறையீடு



கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் விட்டால்தான் சம்பா சாகுபடி மேற்கொள்ள முடியும் என தஞ்சாவூர் மாவட்டத்துக்கு வெள்ளிக்கிழமை வந்த மத்திய நீர் வள ஆணையக் குழுவிடம் விவசாயிகள் முறையிட்டனர்.

காவிரி நதி நீர் ஆணைய உத்தரவுப்படி அக். 15-ம் தேதி வரை வினாடிக்கு 9,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரும் மனுவை உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

இந்நிலையில், இரு மாநிலங்களுக்கு இடையேயான பிரச்னைகளின் தன்மையை அறிவதற்காக மத்திய நீர் வளத் துறைச் செயலர் டி. விஜய் சிங் தலைமையிலான குழுவினர் வியாழக்கிழமை சென்னையில் தமிழக அரசின் தலைமைச் செயலர் தேவேந்திரநாத் சாரங்கி உள்ளிட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மேலும், காவிரி டெல்டா பகுதியில் இப்போதைய நிலை, அக். 15-ம் தேதிக்குப் பிறகு தண்ணீரின் தேவை குறித்து ஆய்வு செய்வதற்காக மத்திய நீர் வள ஆணையத்தின் தலைமைப் பொறியாளர் ஆர்.கே. குப்தா தலைமையில் ஆணைய இயக்குநர் (கண்காணிப்பு - கோவை) டி.கே. சிவராஜன், கண்காணிப்புப் பொறியாளர் (புது தில்லி) வீரேந்திரநாத் சர்மா, துணை இயக்குநர் (பாசனம் மற்றும் திட்டம் - புது தில்லி) பிரதீப் தாகூர் ஆகியோர் தஞ்சாவூர் மாவட்ட எல்லையான கல்லணைக்கு வெள்ளிக்கிழமை பிற்பகல் வந்தனர்.

அவர்களிடம் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய சங்கப் பிரதிநிதிகள் பி. அய்யாக்கண்ணு, புலியூர் ஏ. நாகராஜன், அயிலை சிவ. சூரியன், கவுண்டம்பட்டி ஆர். சுப்பிரமணியன் ஆகியோர், சம்பா சாகுபடி மேற்கொள்வதற்கு 110 நாள்களுக்குத் தண்ணீர் தேவைப்படும். ஆனால், மேட்டூர் அணையில் இப்போது உள்ள தண்ணீர் மூலம் 25 நாள்களுக்கு மட்டுமே சாகுபடி பணிகளை மேற்கொள்ள இயலும். காவிரியில் தண்ணீர் வராவிட்டால் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை உருவாகிவிடும். விவசாயிகளை காப்பாற்ற கர்நாடகத்திலிருந்து தண்ணீர் விட வேண்டும் என வலியுறுத்தினர்.

பின்னர், கல்லணை - தஞ்சாவூர் செல்லும் வழியில் உள்ள பாதிரக்குடி, கச்சமங்கலம், மேகளத்தூர், ஒரத்தூர், கடம்பன்குடி, பூதலூர், குணமங்கலம் உள்ளிட்ட கிராமங்களில் வயல்கள் தரிசாகக் கிடைப்பதையும், காவிரி நீரை எதிர்நோக்கி விவசாயிகள் நிலத்தை உழுது வைத்திருப்பதையும், ஆறுகள், வாய்க்கால்களில் குறைந்த அளவில் செல்லும் நீரோட்டத்தையும் மத்திய குழுவினர் பார்வையிட்டனர்.

இதனிடையே, கச்சமங்கலத்தில் வயலில் இறங்கி விசாரித்த மத்திய குழுவினரிடம் விவசாயிகள் ராயப்பன், ராணி கூறியது:

""கடந்த ஆண்டு இந்தக் காலகட்டத்தில் காரு (6 மாத நெல் பயிர்) நடவு செய்தோம். இப்போது, 3 நாள்களாக வயலில் தண்ணீர் பாய்ச்ச முயற்சி செய்கிறோம். வாய்க்காலில் தண்ணீர் குறைவாக வருவதால் வயலில் பாயவில்லை. தண்ணீரை இறைக்க முடியவில்லை. இதனால், வாங்கி வைத்த விதை நெல்லும் காய்ந்து கொண்டிருக்கிறது. மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளோம்" என்றனர்.

## ரூ.1 கோடி மதிப்பிலான தேயிலைத் தூள் தேக்கம்

காவிரி நீர் பிரச்னையால் கர்நாடகத்துக்குச் செல்ல வேண்டிய லாரிகள் நிறுத்தப்பட்டுள்ளதால், குன்னூரில் உள்ள தேயிலைக் கிடங்குகளில் சுமார் ரூ.1 கோடி மதிப்பிலான தேயிலைத் தூள் தேங்கியுள்ளது.

கடந்த நான்கு நாள்களாக குன்னூரில் இருந்து கர்நாடகத்துக்கு லாரிகள் இயக்கப்படவில்லை. இதன் காரணமாக, காய்கறி உள்ளிட்ட எந்த வகையான சரக்குகளும் கர்நாடகத்துக்குச் செல்லவில்லை.

கர்நாடகத்துக்குச் செல்ல வேண்டிய தேயிலை லாரிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், நகரில் உள்ள அனைத்து தேயிலைக் கிடங்குகளிலும் சுமார் ரூ.1 கோடி மதிப்பிலான தேயிலை தேக்கமடைந்துள்ளது. இதேநிலை நீடித்தால், வரும் வாரத்தில் கிடங்குகளில் தேயிலையைத் தேக்கி வைக்க முடியாத அளவுக்கு இட நெருக்கடி ஏற்படும், ஏல மையத்தில் விலை சரிய வாய்ப்புள்ளதாகவும் டிரான்ஸ்போர்ட் உரிமையாளர்கள் சங்கச் செயலர் சேகர் கூறினார்.

### விவசாயிகளுக்கு பயன் தரும் எஃப்டிஐ: ராகுல் காந்தி



சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டுக்கு (எஃப்டிஐ) அனுமதி அளித்தது, விவசாயிகளுக்கு மிகுந்த பயனைத் தரும் என்று காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல் காந்தி (படம்) தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் 2 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ராகுல் காந்தி, ஸ்ரீநகரில் வியாழக்கிழமை இரவு நடந்த இளைஞர் காங்கிரஸ் நிகழ்ச்சியில் இவ்வாறு தெரிவித்தார். அப்போது அவர் கூறியது:

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதித்தால் விவசாயிகளின் விளைப்பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கும். இடைத்தரகர்கள் களையப்படுவர்.

நாட்டில் போதுமான குளிர்சாதன கிடங்குகள் இல்லாமல் பெரும்பான்மையான வேளாண் பொருள்கள் அழுகி வீணாகிறது. அன்னிய முதலீடு வந்தால் இந்தப் பிரச்னை இருக்காது.

இதனால், விவசாயிகள் லாபமடைவதுடன் அதிக அளவு வேலைவாய்ப்பும் உருவாகும் என்று தெரிவித்தார்.

.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

06.10.2012 A.M

## பயிற்சி முகாம்

கள்ளக்குறிச்சி:விதை விற்பனையாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டது.கள்ளக்குறிச்சி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்த முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் தர்மலிங்கம் தலைமை தாங்கினார். விழுப்புரம் விதை ஆய்வு துணை இயக்குனர் சுப்ரமணியன், விதை ஆய்வாளர்கள் விருத்தாசலம் ஆர். சீனுவாசன், ஜெ.சீனுவாசன், விதை சான்று அலுவலர் அன்பழகன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.சட்டம் மற்றும் அமலாக்கம், விதை உரிமம் பெறுதல் மற்றும் விதிமுறை மீறல்களுக்கான தண்டனைகள், விதை விற்பனையாளர்கள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் மற்றும் விதை சேமிப்பு முறைகள், தரமான விதை உற்பத்தி செய்யும் உத்திகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.பயிற்சி ஏற்பாடுகளை விதை ஆய்வாளர் சீனுவாசன் செய்திருந்தார்.

## திருந்திய நெல் சாகுபடி பயிர்களில் அதிகமாக தண்ணீர் தேக்க கூடாது

உளுந்தூர்பேட்டை:திருந்திய நெல் சாகுபடி பயிர்களில் அதிகளவில் தண்ணீர் தேக்கக்கூடாது என வேளாண் துணை இயக்குனர் அறிவுறுத்தியுள்ளார்.

உளுந்தூர்பேட்டை அடுத்த மூலசமுத்திரத்தில் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை வேளாண் துணை இயக்குனர் அன்பழகன், உதவி வேளாண் இயக்குநர் கருணாநிதி நேரில் பார்வையிட்டனர்.அதிகாரிகள் விவசாயிகளிடம் பேசுகையில், பயிரில் அதிகளவு தண்ணீர் தேங்காமல் பார்த்து கொள்ளுமாறும், நிலத்தில் பாசிபடிவதை தவிர்க்க தண்ணீர் வாயக்கால் வரப்பில் படிகற்களை வைக்குமாறும் அறிவுறுத்தினர்.வேளாண் உதவி அலுவலர் கவிதா, விரிவாக்க அலுவலர் பொன்காமராஜ், உதவி அலுவலர் அந்தோணிசாமி உடனிருந்தனர்

## இலவச கால்நடை மூலிகை சிகிச்சை

கோபிசெட்டிபாளையம்: திங்களூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் இலவச கால்நடை மூலிகை சிகிச்சை முகாம் நடந்தது. ஈரோடு வாசவி கல்லூரி, கவுந்தபாடி ஜெயம் பிராணி நல அறக்கட்டளை சார்பில் திங்களூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் இலவச கால்நடை மூலிகை சிகிச்சை முகாம் நடந்தது. முகாமுக்கு நிர்வாக தலைவர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். கால்நடை டாக்டர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார். ஈரோடு ஆவின் மேலாளர் வெங்கடாசலம், கலந்து கொண்டு கால்நடைகளுக்கு மூலிகை உருண்டை வழங்கினார்.முகாமில் 184 மாடு, 87 எருமைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உருண்டையும், 117 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மூலிகை வழங்கப்பட்டது. முகாமில் திங்களூர் பஞ்சாயத்து தலைவர் சீதா, வாசவி கல்லூரி பேராசிரியர் மாணிக்கம், உலக மகளிர் உரிம கழக உறுப்பினர் ஜெயலட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கரும்பு விலை நிர்ணயிக்க முத்தரப்பு கூட்டம் தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

ஈரோடு: ""நடப்பு கரும்பு அரவை பருவத்திற்கு விலையை நிர்ணயிக்க முத்தரப்பு கூட்டம் கூட்டி, வயல் வெளி விலையாக டன்னுக்கு, 2,500 ரூபாய் நிர்ணயிக்க வேண்டும்'' என, தமிழக விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்க ஈரோடு மாவட்டக்கூட்டம், மாவட்ட தலைவர் குமாரசாமி தலைமையில் நடந்தது.

கீழ்பவானி பாசனப்பகுதியில் முதலாம் மண்டலத்துக்கு பொதுப்பணித்துறையின் தவறான நீர் நிர்வாகக் கொள்கையால் பாசனப்பகுதிக்கு உரிய தண்ணீர் வழங்கப்படவில்லை. இதனால், பயிர்கள், கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வேளாண், கால்நடை, வருவாய்த்துறைகள் பரிசீலித்து, ஏக்கருக்கு குறைந்தது, 10 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்க வேண்டும். முதல்வர் ஜெயலலிதா இதை பரிவுடன் கவனித்து, தேவையான தொகையான, 103.5 கோடி ரூபாயை உடனடியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

நடப்பு கரும்பு அரவை பருவத்துக்கு சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்புக்கு விலையை அறிவிக்க உடனடியாக முத்தரப்பு கூட்டத்தை மாநில அரசு கூட்ட வேண்டும். அதில், வயல்வெளி விலையாக டன்னுக்கு, 2,500 ரூபாய் நிர்ணயிக்க வேண்டும்.

சாய, தோல் ஆலை கழிவுகள் உச்ச, உயர் நீதிமன்ற தீர்ப்புகளுக்கு முரணாக காவிரி, காலிங்கராயன் நீர் நிலைகளில் கலப்பதால், பெரிதும் மாசுபடுகிறது. இதை உடனடியாக அனைத்து துறை அதிகாரிகளும் கண்காணித்து, சாய, தோல் ஆலைக்கழிவுகள் கலப்பதை தடை செய்ய வேண்டும்.

பெரும்பள்ளம் பாசன ஓடைப்பகுதியில் ஆக்கிரமிப்பை அகற்றி, அணைக்கட்டு பகுதியை உடனடியாக சுத்தம் செய்து, 4,000 ஏக்கர் பாசனப்பகுதிக்கு பாசன வசதியை செய்து தர பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முன்னறிவிப்பின்றி அடிக்கடி மின்சாரம் தடைபடுவதால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மின்வாரியம் மின் விநியோகத்தை சீராக முறைப்படுத்தி வழங்கவும், மின் தடையை முன்னறிவிப்புடன் மட்டுமே செயல்படுத்த வேண்டும் என்பது உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட பொருளாளர் லட்சுமணன், வேலுச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தரமான விதை உற்பத்தி குறித்து தொழில் நுட்ப பயிற்சி முகாம்

நாமக்கல்: விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் மூலம் தரமான சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்ய அட்மா திட்டத்தின் கீழ், ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர் வட்டாரத்தை சேர்ந்த விதைப்பண்ணை விவசாயிகளுக்கான தொழில் நுட்பட பயிற்சி முகாம், ராசிபுரம் யூனியன் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது.மாவட்ட வேளாண் துணை இயக்குனர் முரளிதரன் (பொறுப்பு) பயிற்சியை துவக்கி வைத்து, தரமான விதை உற்பத்தியின் நோக்கம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் முக்கியத்துவம், உயிர் உரத்தின் அவசியம் குறித்து விளக்கினார். மேலும், விதைப்பண்ணை விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதையைத்தான், நமது விவசாயிகள் வாங்கி பயன்படுத்துகின்றனர் என்ற மனசாட்சிபடி உற்பத்தி செய்து வழங்க வேண்டும் என, அறிவுறுத்தினார்.விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், சான்று விதையின் முக்கியத்துவம், விதைப்பண்ணை அமைக்கும்போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்கள், அங்ககச்சான்று அளிப்பு குறித்து விளக்கினார். கருவிதை, வல்லுனர் விதை, ஆதார விதை மற்றும் சான்று விதைகள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் கூறினார்.நடமாடும் மண் ஆய்வுகூட அலுவலர் ஜெயக்குமார், விதை ஆய்வாளர் ராஜேந்திரன், அலுவலர்கள் கந்தசாமி, முருகேசன் ஆகியோர், தத்தமது துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பேசினர்.ஏற்பாடுகளை, விதை உதவி அலுவலர்கள் தேவராஜூ, சாமிநாதன், பால்ராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

## கால்நடை வளர்ப்பு பயிற்சி விவசாயிகள் பங்கேற்பு

கரூர்: கால்நடை பல்கலை பயிற்சி மையத்தில், கால்நடை வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.கரூர் பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய

வளாகத்தில், ஐ.ஓ.பி., தொழில் முனைவோர் பயிற்சி மையத்தின் சார்பில், கால்நடை வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது. முகாமில், கால்நடை வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கும் பண்ணை வீட்டு அமைப்பு, தீவன மேலாண்மை, கால்நடைகளை தாக்கும் நோய்கள், அதை தடுக்கும் முறை, விற்பனை உத்திகள், வங்கி கடனுதவி, பண்ணைக்கான காப்பீடு, பண்ணை பொருளாதாரம் குறித்து, பேராசிரியர்கள் செந்தில்வேல், அகிலா ஆகியோர் பேசினர். ஐ.ஓ.பி., தொழிற்பயிற்சி மைய இயக்குனர் சந்திரசேகர் உட்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

## பயறுவகை சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி: "வம்பன்' நிலையம் அழைப்பு

புதுக்கோட்டை: பயறுவகை பயிர்கள் சாகுபடியில், இயந்திரமயமாக்கல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதென வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் முடிவு செய்துள்ளது.இதுகுறித்து அறிவியல் நிலைய பேராசிரியர் கலா வெளியிட்டுள்ள அறிக்கை:புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆண்டுதோறும் உளுந்து, தட்டைப் பயறு, துவரை, கொள்ளு போன்ற பயறுவகை பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயப் பணிகளுக்கு ஆள் பற்றாக்குறை நிலவுவதால், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பயறுவகை பயிர்களை சாகுபடி செய்யமுடியாமல் விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.உழவுப் பணிமுதல் விதை விதைத்தல், நீர் பாய்ச்சுதல், களை எடுத்தல், உரம் இடுதல், அறுவடை செய்தல் போன்ற பணிகளை, விவசாயிகளே செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இவற்றை காலதாமதப் படுத்தினால் மகசூல் இழப்பை சந்திக்கவேண்டிவரும் என்பதற்காக, நிர்ணயிக்கப்பட்ட கூலியை விட, அதிக கூலி கொடுத்து தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தவேண்டிய கட்டாயம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.இவை பொருளாதார இழப்புக்கு வழிவகுக்கிறது. இதை தவிர்க்கும் விதமாக, விவசாயப் பணிகளுக்கு வேளாண் பொறியியல் துறையின் சார்பில், நவீன வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. பயறுவகை பயிர்கள் சாகுபடியில் உழவு செய்தல், விதைத்தல், களை பறித்தல், நீர் பாய்ச்சுதல், உரம் இடுதல், அறுவடை செய்தல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தவேண்டிய வேளாண் கருவிகள் குறித்தும், பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும், விவசாயிகளுக்கு இலவச பயிற்சி அளிப்பதென வேளாண் அறிவியல் நிலையம் முடிவு செய்துள்ளது.வம்பன் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தில் வரும், 9ம் தேதி காலை, பத்து மணிக்கு இதற்கான பயிற்சி முகாம் நடக்கிறது. மாவட்டத்தில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் இதில் பங்கேற்கலாம்.

## மானாவாரி நிலங்களில் பயிர்கள் முளையிலேயே கருகும் நிலை

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி பகுதியில் தென் மேற்கு பருவ மழையை நம்பி, மானாவாரி நிலங்களில் விதைத்த பயிர்கள் முளைத்த நிலையில், மழை இல்லாமல் கருகி வருகின்றன. ஆண்டிபட்டி

பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மானாவாரி விவசாயம் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆவணி, புரட்டாசி மாதங்களில் பெய்யும் மழையை நம்பி விவசாயிகள் மானாவாரி நிலங்களில் சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற தானிய பயிர்கள், மொச்சை, துவரை, தட்டை, பாசி, உளுந்து போன்ற பயறு வகைகள் விதைப்பு செய்வர்.இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை பொய்த்துப்போனதால் விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த 15 நாட்களுக்கு முன்பு பெய்த மழையை நம்பி உழவு செய்த நிலங்களில் விதைப்பு செய்தனர். ஒரு நாள் மழையில் இருந்த ஈரத்தில் விதைத்த தானிய, பயறு வகைகள் முளைத்து விட்டன. தொடர்ந்து மழை பெய்யவில்லை. இதனால் முளைத்த பயிர்கள் தற்போது கருகும் நிலையில் உள்ளன.
தற்போதுள்ள சூழலில் மழை பெய்யவில்லை என்றால், விவசாயிகள் உழவு, விதைப்பு செய்த செலவுகள் வீணாகி விடும் ,என்ற கவலையில் உள்ளனர். இறவை பாசன கிணறுகளும் வற்றி வருவதால் ஆண்டிபட்டி பகுதியில் இந்த ஆண்டு விவசாயம் கேள்விக்குறியாகி விட்டது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.10.2012 A.M**

## காய்கறி, பழங்களை சேமிக்க ஈகான் குளிர்பதன கிடங்கு

சென்னை: தக்காளி, காய்கனிகள் வீணாகிவிட்டதே என்ற கவலை விவசாயிகளுக்கு இனி வேண்டாம். பழங்கள், காய்கறிகள், பூக்களை பாதுகாத்து நல்ல விலைக்கு விற்க உதவுகிறது ஈகான் நிறுவன குளிர்பதன கிடங்கு.

இதுகுறித்து, இந்நிர்வாக இயக்குனர் ஏ.ஏசுதாசன் கூறியதாவது:

நாளுக்கு நாள் காய்கறி மற்றும் தக்காளி விலை மாறும்போது விளைவித்தவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் தேவைக்கேற்ற குளுகுளு கிடங்குகள் அமைத்து பாதுகாக்கும்போது, மிகுந்த லாபம் பெறலாம். குளிர்சாதன தொழிற்சாலையில் பல ஆண்டு அனுபவம் மூலம் குளிர்பதன கிடங்குகளை தரமான, உறுதியான ஜிஐ தகடுகளால் சுவர்கள் மூலம் கோல்டு ஸ்டோரேஜ், இன்குபெட்டர் அமைத்து வருகிறோம்.

மருத்துவ வளாகங்கள், ஆம்புலன்ஸ், அலுவலக வளாகங்களில் குறைந்த மின்சாரத்தில் செயல்படும்படி அமைக்கிறோம். இதில் கசிவு, பழுது ஏற்படாது, இயற்கையான எத்திலின் வாயுவால் சுற்றுச்சூழல் மாசுபடாது. விரைவில் சூரிய ஒளி மின்சாரத்தில் இயங்கும் அதிநவீன குளிர்பதன கிடங்குகள், உபகரணங்களுடன் கூடிய தடுப்பூசி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் அமைக்க இருக்கிறோம்.

தமிழகம் மட்டுமின்றி மற்ற மாநிலங்களிலும் எங்களது சேவை தொடர்கிறது. ரெப்ரிஜிரேஷன் குடோன்களுக்கு அரசு மானியம், வங்கி கடன், உத்தரவாதம் என அனைத்து உதவிகளையும் செய்கிறோம்.

விவசாயிகள் குளிர்பதன கிடங்கு அமைக்க அரசும் கேட்டுக்கொண்டுள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி குளிர்பதன கிடங்குகளை அமைத்து விவசாயிகள் பயன் பெறலாம்” என்றார்.

மேலும் விவரங்களுக்கு 044-24716252, 24719252/ ணினீணீவீறீ: ணீபீனீவீரூ @மீணீளீநீஷீரூ .நீஷீனீ என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

## ஆற்காடு அருகே விளைச்சல் முதன்முறையாக 115 கிலோ பாமாயில் பழம் கொள்முதல்

ஆற்காடு,: ஆற்காடு அருகே முதன்முறையாக 115 கிலோ பாமாயில் பழக்குலைகள் கொள்முதல் செய்யப்பட்டது.
வேலூர் மாவட்டத்தில் ஆற்காடு அடுத்த தக்கான்குளம் கிராமத்தில் விவசாயி ஒருவரது நிலத்தில் கடந்த 2009 செப்டம்பர் முதன்முறையாக மத்திய, மாநில அரசுகள் இணைந்து வேளாண்மை துறையால் பாமாயில் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டது.
இந்த பாமாயில் தோட்டத்தில் மரங்கள் வளர்ந்து பழக்குலைகள் அறுவடை செய்யும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதை வேளாண்மைத் துறை உதவி இயக்குனர் மகேந்திர பிரதாப் தீட்சித் மற்றும் வேளாண்மை அலுவலர் பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.
இந்த பாமாயில் பழக்குலைகளை தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள தனியார் பாமாயில் நிறுவனம் கொள்முதல் செய்து கொண்டது. ஜூன் 12 முதல் செப்டம்பர் வரை டன் ஒன்றுக்கு ரூ.7026 என வேளாண்மைத்துறை ஆணையரால் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிடமிருந்து மொத்தம் 115 கிலோ பாமாயில் பழக்குலைகள் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான காசோலை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் நிறுவன மேலாளர் ஜார்த்தனன், வேளாண்மைத் துறை அதிகாரிகள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## டெல்டா நிலவரம் மத்தியக்குழு இன்று வருகை வெடிப்பு விழுந்த வயல்கள் விவசாயிகள் குமுறல்

மன்னார்குடி, : திருவாரூர் மாவட்டத்தில் இன்று ஆய்வு செய்யும் மத்திய குழுவினர் உண்மை நிலையை ஆய்ந்து ஆய்வறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.
பருவமழை பெய்யவில்லை என்று கூறி காவிரியில் தண்ணீர் தர கர்நாடகம் மறுத்ததால் மேட்டூர் அணை குறுவை சாகுடிக்காக ஜூன் 12ம் தேதி திறக்கவில்லை. இதனால் குறுவை சாகுபடி பரப்பு பெருமளவு குறைந்தது. பின்னர் மேட்டூர் அணையில் இருந்து செப்டம்பர் 17ம் தேதி 15 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அதன் மூலம் தற்போது சம்பா சாகுபடி நடைபெற்று வருகிறது. குறைந்தளவே தண்ணீர் திறக்கப்பட்டதால் கடைமடை பகுதியில் உள்ள திருவாரூர், நாகை மாவட்டங்களில் உள்ள கிளை ஆறு, வாய்க்கால்களுக்கு முழுமையாக தண்ணீர் சென்றடையவில்லை. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக நேரடி விதை நெல் தெளிப்பு செய்து விட்டு விவசாயிகள் மழையை எதிர்பார்த்துள்ளனர்.
இதற்கிடையே டெல்லியில் நடந்த காவிரி கண்காணிப்புக்குழு கூட்டத்தில் தமிழக அரசு தினமும் 2 டிஎம்சி தண்ணீர் கேட்டது. அதற்கு மறுப்பு தெரிவித்த கர்நாடகத்திற்கு பிரதமர் 9 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கவேண்டும் என உத்தரவிட்டார். அந்த உத்தரவையும் கர்நாடக அரசு ஏற்க மறுத்தது. பின்னர் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தை அணுகியது. 9 ஆயிரம் கன அடி தண்ணீர் கட்டாயம் திறக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதால், தற்போது தினமும் 9

ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீரும் எத்தனை நாட்களுக்கு கிடைக்கும் என்ற உத்தரவாதமில்லாமல் உள்ளதால் விவசாயிகள் அச்சமடைந்து விவசாய தொழிலை தொடர்ந்து செய்யமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மத்திய அரசு, நீர்ப்பாசனத்துறை அதிகாரிகள் தமிழகம், கர்நாடகம் உள்ளிட்ட காவிரி பாசன பகுதி மற்றும் நீர் பிடிப்பு பகுதிகளை ஆய்வு செய்ய மத்திய நீர்ப்பாசனத்துறை செயலாளர் டி.வி.சிங் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை அனுப்பியுள்ளது. அதில் ஒரு குழுவினர் தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இன்று திருவாரூர் மாவட்டத்தில் ஆய்வு செய்ய உள்ளனர்.

இந்த குழுவினர் காவிரி நீர் கிடைக்காமல் தாங்கள் படும் இன்னல்களை நேரடியாக பார்வையிட்டு உண்மை நிலையை தெளிவு படுத்தவேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

காவிரி நீர் இல்லாமல் குடிநீர் ஆதரமே குறைந்துவிட்டது. விவசாய தொழிலாளர்கள் வேலை கிடைக்காமல் வெளி மாநிலத்திற்கு வேலை தேடிச்செல்கின்றனர். குளம், குட்டைகளில் தண்ணீர் இன்றி வறண்டு விட்டது. கால்நடைகளுக்கும் குடிநீர் கிடைக்காமல் பாதித்து வருகின்றன. இதுபோன்ற உண்மை நிலையை பார்வையிட்டு விவசாயிகளிடம் கேட்டறிந்து மத்திய அரசுக்கு தெரிவித்து காவிரியில் உரிய தண்ணீரை பெற்று தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே திருவாரூர் மாவட்ட விவசாயிகளின் எதிர்பார்ப்பாகும்.

தமிழ்நாடு விவசாய சங்க திருவாரூர் மாவட்ட துணைச்செயலாளர் பிஆர்.பாண்டியன் கூறுகை யில், ‘காவிரி நீரை நம்பி 11 டெல்டா மாவட்டங்களில் 22 லட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. கடந்தாண்டு ஜூன் 6ம் தேதியே தண்ணீர் திறந்ததால் குறுவை சாகுபடி 3.5 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் இந்தாண்டு ஒரு லட்சம் ஏக்கரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட 2 லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய மின்தொகுப்பிலிருந்து மின்சாரம் கிடைக்காமல் கிணற்று பாசன விவசாயிகள் செய்த குறுவை சாகுபடியும் மின் தட்டுப்பாட்டால் மோட்டார்களை இயக்க முடியாமல் நீரின்றி கருகிவிட்டது.

இந்தாண்டு ஒரு போக சம்பா சாகுபடி மேற்கொள்ள ஜூலை கடைசி வாரத்தில் திறந்திருக்க வேண்டிய மேட்டூர் அணை கர்நாடகம் தண்ணீர் தரமறுத்ததால் செப்டம்பர் 17ம் தேதி தான் திறக்கப்பட்டது. அந்த தண்ணீர் இன்னும் கடைமடை பகுதிகளில் உள்ள கிளை ஆறுகள் மற்றும் பாசன வாய்க்கால்களுக்கு முழுமையாக சென்றடையவில்லை. குறைந்த அளவு தண்ணீரை பயன்படுத்தி சம்பா சாகுபடியை மேற்கொள்ள தமிழக அரசு வழங்கிய அறிவுரையை ஏற்று ஒரு சில விவசாயிகள் நாற்றுவிட்டும், பெரும்பாலான விவசாயிகள் நேரடி விதை தெளிப்பும் செய்துள்ளனர். அந்த விவசாய நிலங்களில் பயிர்கள் முளைத்தும் நாற்றுகள் நடவுப்பணிக்காக

தண்ணீரை எதிர்நோக்கியுள்ளன.
குளம், குட்டைகள் வறண்டு கிடப்பதால், கால்நடைகள் நீரின்றி பாதித்து பல்வேறு நோய் தாக்குதல்களுக்கு ஆளாகி வருகின்றன. தென்னை, வாழை உள்ளிட்ட தோட்டப்பயிர்களும் கருக தொடங்கியுள்ளன.
நீராதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளதால் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிப்புகளின் நிலையை மத்திய அரசுக்கு உணர்த்தி கர்நாடகத்திடம் தினமும் 2 டிஎம்சி தண்ணீரை வரும் பிப்ரவரி மாதம் இறுதி வரை கேட்டு பெற்று தருவதற்குரிய உத்தரவாதத்தை வழங்கும் வகையில் நிபுணர் குழு தனது அறிக்கையை தாக்கல் செய்யவேண்டும்' என்றார்.
முன்னோடி விவசாயி சத்யநாராயணா கூறுகையில், 'கர்நாடகம் தண்ணீர் தரமறுத்து வருவதால் காவிரியில் நீர் வராமல் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கடல் நீர் உட்புகுந்து பல இடங்களில் உப்பு நீராக மாறிவருகிறது. சாகுபடி பாதித்த விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் பொருளாதரா இழப்பை மத்திய குழு விசாரிக்க வேண்டும். கர்நாடக அரசு சார்பில் நேற்று முன் தினம் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மறு சீராய்வு மனுவில் தமிழகத்திற்கு தண்ணீர் தர தேவையில்லை என்று கூறப்பட்டுள்ளது. இது முற்றிலும் கண்டிக்கத்தக்கது.
விவசாயிகளின் நிலையை நேரில் பார்த்தும், அறிந்தும் தனது அறிக்கையை சமர்ப்பித்து மத்திய அரசுக்கும், உச்சநீதிமன்றத்திற்கும் உண்மை நிலைய புரிய வைக்கவேண்டும்' என்றார்.

## விவசாயிகளின் நிலை திரிசங்கு சொர்க்கம்

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் நலச்சங்க தலைவர் சேதுராமன் கூறுகையில், 'தற்போது மேட்டூர் அணையில் 35 டிஎம்சி தண்ணீர் தான் உள்ளது. தினமும் 15,000 கனஅடி தண்ணீர் அணையிலிருந்து எடுக்கப்படுகிறது. கர்நாடகாவில் இருந்து 9,000 கன அடி தண்ணீர் திறந்து விடுகிறார்கள். அந்த தண்ணீரும் எத்தனை நாட்களுக்கு கிடைக்கும் என்பது தெரியவில்லை. இந்நிலையில் 120 நாட்கள் கொண்ட சம்பா பயிருக்கு, தற்போது உள்ள தண்ணீர் 60 நாட்களுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. வடகிழக்கு பருவமழை பெய்யுமா என்ற சந்தேகத்துடன் விவசாயிகள் உள்ளனர். பெய்தாலும் ஒட்டுமொத்தமாக ஓரிரு நாட்களில் பெய்து விவசாயத்தை வீணடித்து விட்டுத்தான் போகும்.
இந்நிலையில் சம்பா சாகுபடி பரப்பில் லட்சம் ஏக்கருக்கு மட்டுமே மானியம் உள்ளிட்ட மற்ற திட்டங்களை தமிழக அரசு அறிவித்துள்ளது. கர்நாடகம் தண்ணீர் தரமறுப்பு, பருவமழை பாதிப்பு, தமிழக அரசு சிறப்பு திட்டத்தை முழுமையாக அறிவிக்காதது போன்றவற்றால் விவசாயிகளின் நிலை திரிசங்கு சொர்க்கமாக்கப்பட்டுள்ளது. தண்ணீரில்லாத காரணத்தால் விவசாய பணிகள் நடைபெறவில்லை. மத்திய நிபுணர்குழு பார்வையிட்டு கர்நாடகத்திடம் உரிய தண்ணீரை பெற்று தருவதற்கும், மத்திய தொகுப்பில் இருந்து மின்சாரத்தை பெற்று தந்தால் தான் தற்போது சாகுபடி

செய்யப்பட்டுள்ள 10 சதவீத சாகுபடி பணியையும் பாதுகாக்க முடியும் என்ற நிலையை மத்திய அரசுக்கு தெரியப்படுத்தவேண்டும். மேலும் இதுவரை குறுவை பாதித்தற்கு இழப்பீட்டுத் தொகை, சம்பா சாகுபடியை மேற்கொள்ள ஊக்கத்தொகை வழங்க மத்திய அரசுக்கு பரிந்துரைக்கவேண்டும்' என்றார்.

## கொடைக்கானலில் விதை விற்பனையாளர்களுக்கு அட்மா திட்டத்தின்கீழ் பயிற்சி

திண்டுக்கல், : கொடைக்கானலில் விதை விற்பனை உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்கள் மற்றும் நாற்றுப்பண்ணை உரிமையாளர்களுக்கும் அட்மா திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது. வத்தலக்குண்டு விதை ஆய்வாளர் சேட்முகமது வரவேற்றார்.

தோட்டக்கலைத் துணை இயக்குநர்(மத்தியத்திட்டம்) ராஜாமுகமது தலைமை வகிக்க, துணை இயக்குநர்(மாநிலத்திட்டம்) கந்தசாமி முன்னிலை வகித்தார். கரூர் விதை ஆய்வு துணை இயக்குநர் ரங்கராஜன் சிறப்புரை ஆற்றினார். மலைக்காய்கறிவிதைகள் உற்பத்தி, தரமான புதிய ரக பழநாற்றுக்கள் தயாரிப்பு, மலைபபயிர்களில் வீரிய விதைகள் உற்பத்தி, விதைச்சட்ட அமலாக்கம், விதை சேமிப்பு முறைகள், சேமித்து¬ வக்கும் விதைகளைத் தாக்கும் பூச்சிகள், சேதாரங்கள், தடுப்பு முறைகள் குறித்து விளக்கப்பட்டன.

தொடர்ந்து உரிமம் பெற்ற பிறகே விதை விற்பனையை மேற்கொள்ள வேண்டும். எனினும் திடீர் ஆய்வு செய்யப்படும் போது முறைப்புத்திறன், விதைச்சுத்தம் உள்ளிட்ட சோதனைக்காக மாதிரிகள் எடுக்கப்பட்டு விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்படும். அதில் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டால் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மூலம் வழக்குத் தொடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொடைக்கானல் தோட்டக்கலை ஆராய்ச்சிநிலைய இணைப் பேராசிரியர் ராஜாங்கம், பூச்சியல் துறை உதவித் பேராசிரியை பிரேமலதா, பழநி விதை ஆய்வாளர் காசிராஜன் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு தொழில்நுட்ப விளக்கங்களை அளித்தனர்.

## க.பரமத்தி ஒன்றியத்தில் 50% மானியத்தில் காய்கறி விதை

க.பரமத்தி, :தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

க.பரமத்தி ஒன்றியத்தில் அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளக்குறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், புன்னம், ராஜபுரம், சூடாமணி, தென்னிலை உள்ளிட்ட 30 ஊராட்சிகள் உள்ளன.

க.பரமத்தி தோட்டக்கலைத்துறை சார்பில் காய்கறி விதைகள், பழ மர செடிகள், 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை

அபிவிருத்தி திட்டம் கீழ், ஒவ்வொரு ஆண்டும் வீரிய விதைகள், ஒட்டு ரக பழக்கன்றுகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. அதன்படி, நடப்பாண்டில் க.பரமத்தி வட்டார விவசாயிகளுக்கு மிளகாய், வெண்டை, முருங்கை, தக்காளி போன்ற விதைகள் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.மேலும், பழ மர சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, பலா, நெல்லி போன்ற பழ மர செடிகள் 50 சதவீத மானிய விலையில், நல்ல தரமான ஒட்டு கன்றுகள் வினியோகம் செய்யப்படுகிறது. எனவே விதைகள், பழமரகன்றுகள் பெற விருப்பமுள்ள விவசாயிகள் க.பரமத்தி தோட்டக்கலை அலுவலகத்தை விவசாயிகள் அணுகி பயன்பெறலாம். இவ்வாறு சொர்ணமாணிக்கம் தெரிவித்துள்ளார்.

## பருவமழை பொய்த்தது கோம்பையில் கருகும் தக்காளி செடிகள் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம்

தேவாரம், : கோம்பை பகுதியில் விதைத்த தக்காளி செடிகள் அடியோடு கருகியதால் ரூ.பல லட்சம் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தேவாரம், கோம்பை, அனுமந்தன்பட்டி உள் ளிட்ட மலையடிவாரப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் ஆண்டுதோறும் தக்காளி விவசாயம் செய்யப்படும். வானம்பார்த்த பூமியாய் உள்ள இங்குள்ள மலையடிவார நிலங்களில் மழை பெய்தால் மட்டுமே தக்காளி, பீன்ஸ், எள், நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படும். மற்ற காலங்களில் நிலங்கள் தரிசாகவே கிடக்கும். கடந்த மாதம் திடீரென பெய்த மழையி னால் நம்பிக்கை வைத்து, இப்பகுதியில் குறுகிய கால பயிரான தக்காளிச்செடிகளை பயிரிட்டனர்.

எப்படியும் மீண்டும் மழை கிடைக்கும் என்று எதிர்பார்த்த விவசாயிக ளின் வாழ்வில் தற்போதோ அடிமேல் அடியாக கடுமை யான வெப்பம் கொளுத்துகிறது. இதனால் தக்காளி உள்ளிட்ட பயிர்களை விதைத்த விவசாயிகள் வாடி உள்ளனர். கடன் வாங்கி விதைத்த தக்காளிக்கு எப்படியாவது மழை கிடைத்திடும் என்ற எதிர்பார்ப்பு தற்போது ஏமாற்றமாகி விட்டது. இதுகுறித்து தக்காளி விவசாயிகள் கூறுகையில், ‘ இந்த ஆண்டு நம்பி விதைத்த பயிர்கள் கருகி போகி பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது’ என்றனர்.

## வைகை அணையில் தூத்துக்குடி விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பு பயிற்சி

ஆண்டிபட்டி, : வைகைஅணையில் தூத்தக்குடி விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டது.

ஆண்டிபட்டி அருகே வைகை அணையில் தூத்துக்குடி மாவட்டம் தென்திருப்போரை வட்டத்தைச் சேர்ந்த 20 விவசாயிகளுக்கு மீன்வளத்துறை சார்பில் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியை தேனி மாவட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கி வழங்கினார். வைகை அணையில் மீன்பிடிப்பு, மஞ்சளாறில் மீன் குஞ்சு உற்பத்தி, வளர்ப்பு, கூட்டு மீன் வளர்ப்பு, தொடர்பான தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டன. தூத்துக்குடி

மாவட்ட மீன்துறை ஆய்வாளர் உமா, வைகை அணை உதவி ஆய்வாளர் முருகேசன், மீன்வள மேற்பார்வையாளர்கள் சதாசிவம், பாண்டியன் கலந்து கொண்டனர்.

## பாசன பரப்பு குறைந்ததால் நெல் விலை இருமடங்காக உயர்வு

நாகர்கோவில், : குமரி யில் நெல் பாசன பரப்பு குறைந்துள்ளதால் நெல் விலை இருமடங்காக உயர்ந்துள்ளது.
குமரியில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு சுமார் 40 ஆயிரம் ஹெக்டேரில் நெல் விவசாயம் நடைபெற்று வந்தது. இதனால் நாகர்கோவில் ஒழுகினசேரி, புத்தேரி, பார்வதிபுரம், இடலாக்குடி, பறக்கை சந்திப்பு, கோணம் ஆகிய இடங் களை கடந்து விட்டாலே இருபுறமும் பச்சை பட்டா டையை பூமியில் போர்த்தியது போல் கண்ணிற்கு குளுமையாக காணப்படும்.
தடுக்கி விழுந்தால் நீர் நிலைகள் என்பதால் கோடையில் கூட மனதிற்கு ரம்மியமான காலநிலை குமரியில் நிலவி வந்தது. இதனால் இங்கு பணி நிமித்தமாக வருபவர்கள் கூட இங்கேயே நிரந்தரமாக தங்கிய காலமும் உண்டு. ஆனால் கடந்த 2005ம் ஆண்டிற்கு பின்னர் விவசாய விளை நிலங்கள் ரியல் எஸ்டேட்டாக மாற்றப்பட்டு வருகிறது. இத னால் சீதோஷ்ண நிலையும் மாற்றம் கண்டு விட்டது. நெல் விவசாயத்தில் போதுமான லாபம் கிடைக்காவிட்டாலும், விவசாயத்தை பெருமையாக கருதி வந்தவர்கள் கூட வீட்டுமனைகள் காரணமாக தங் களது மனைகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் தரிசாக வைத்திருக்க வேண் டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதுபற்றி கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தும், உயர் நீதிமன்றமே உத்தரவிட்டும் யாரும் இதனை கண்டுகொள்ளவில்லை.
இந்நிலையில் தமிழகம் முழுவதும் பருவமழை பொய்த்துள்ளதால் அணைகள் வறண்டு நெல்விவசாய பகுதிகள் வெகு வாக குறைந்துள்ளன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட குளங்கள் ஆக்கிரமிப்பில் காணாமல் போய் விட்ட தால் தண்ணீருக்கு தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குமரி யில் இருபோகம் பயிர் செய்தவர்கள் கூட இம்முறை பயிரிடவில்லை.
இதனால் வெறும் 5,979 ஹெக்டேர் நிலங்களில் மட்டுமே பயிரிடப்பட்டது. தற்போது அறுவடை தொடங்கி விட்டாலும் நெல் வரத்து கணிசமாக குறைந்துள்ளதால் நெல் லின் விலை இருமடங்காக உயர்ந்துள்ளது. குமரியில் அம்பை 16 ரகம் மட்டுமே பயிரிடப்பட்டு வருகிறது. கடந்தாண்டு இதேமாதம் ரூ.850க்கு விற்ற ஒரு மூடை (87 கிலோ) தற்போது ரூ.1,420க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.
இதேபோல் தஞ்சையிலிருந்து கொள்முதல் செய்யப்படும் சி.ஆர். 1009 என்ற நெல்லும் ரூ.800 லிருந்து ரூ.1,050 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 5 நாட்களில் அறுவடை முடிவடைந்து விடும் என்பதால் நெல்லின் விலை மேலும் விலை உயர வாய்ப்புகள் உள்ளதாக வியாபாரிகள் மத்தியில் கூறப்படுகிறது. ஆனால் தற்போது நெல் லின் விலை உயர்ந்து வரு வது விவசாயிகள் மத்தி யில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பல விவசாயிகள் தங்களது விளைச்சலை சேமிக்கத்

தொடங்கியுள்ளனர்.

கும்பப்பூவில் மேலும் குறையும்

அணைகளின் நீர்மட்டம் தற்போது மிகவும் மோசமான நிலையில் உள்ளது, (அடைப்பில் கடந்தாண்டு இதேநாள் நிலவரம்) பேச்சிப்பாறை 3.80 (21), பெருஞ்சாணி 17.85 (42.75), சிற்றாறு -1 2.62 (3.48), சிற்றாறு -2: 2.72 (3.57). அணைகளில் நீர் இருப்பு மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அதிசயமாக தண்ணீர் அதிகம் தேங்கியுள்ள குளக்கரைகளில் மட்டுமே கும்பப்பூ சாகுபடி பயிரிடப்பட உள்ளது. இதனால் நெல்லின் விலை மேலும் கடுமையாக உயரும் வாய்ப்புகள் உள்ளது. நெல் விவசாயத்திற்கு மதிப்பும் அதிகரித்து வருகிறது.

கலெக்டர் கண்டுகொள்வாரா?
கலெக்டராக ராஜேந்திர ரத்னூ பணியாற்றும்போது விளைநிலங்களை பாதுகாக்க கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவரது அதிரடி நடவடிக்கை காரணமாக விளைநிலங்கள் அழிக்கப்படுவது கட்டுப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் வந்த ஆஷீஸ் குமாரும் கடும் நடவடிக்கையை தொடங்கும் வேளையில் மாற்றப்பட்டார். எனவே தற்போதைய கலெக்டர் நாகராஜனும் அதிரடி நடவடிக்கைகளை பாரபட்சமின்றி மேற்கொள்ள கோரிக்கை எழுந்துள்ளது.

புத்தேரி குளம் திறக்கப்படுமா?
புத்தேரி பெரிய குளத்தின் கரையில் விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டாலும் கூட இன்னமும் 750 ஏக்கர் நிலம் விவசாய நிலமாக உள்ளது. ஆனால் இந்த நிலங்களில் பயிர் செய்ய முடியாமல் குளத்தின் மதகுகள் ஏற்கனவே சேதப்படுத்தப்பட்டன. மேலும் பொதுப்பணித்துறையும் விளை நிலங்களே இல்லை எனக்கூறி குளத்தை திறக்க வில்லை. இதனால் பயிர் செய்ய வாய்ப்பிருந்தும் தகுதியான நிலங்கள் காய்வதுடன், பெரிய குளத்தின் நீரும் வீணாக ஆவியாகி வருகிறது.

**8 மணி நேரத்தில் 2 ஹெக்டேர் நடவு செய்யும் கருவி அதிகாரிகள் விளக்கம்**

நாகர்கோவில், : 8 மணி நேரத்தில் 2 ஹெக்டேர் நடவு செய்யும் கருவியை வேளாண் பொறியியல்துறை அதிகாரிகள் அறிமுகப்படுத்தினர்.

வறட்சி, விளைச்சலுக்கு போதிய விலையின்மை ஆகியவற்றால் விவசாயம் கடும் நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்நிலையில் நாளுக்கு நாள் விவசாயப் பணியாளர்கள் பற்றாக்குறையும் அதிகரித்து வரு வதால் விவசாயம் மிகவும் பின்தங்கும் நிலையில் உள்ளது. இந்நிலையில் விவசாய கூலித் தொழிலாளர்கள் தட்டுபாட்டை சமாளிக்க வேளாண்மை பொறியியல் துறை

நவீன இயந்திரங்களை அறிமுகம் செய்து வருகிறது.
நாற்று நடுவது, களை பறிப்பது, உழுதல், அறுவடை மற்றும் அறுவடை முடிந்து நெற்கதிர்களை கட்டுவது வரை இயந்திர மயமாகி விட்டது. இதனால் ஒரே சீராக நாற்றுகளை நடமுடிவதுடன், குறைந்த நேரத்தில் அதிக பரப்பில் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் முடிகிறது. தற்போது நவீன இயந்திரங்களை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தும் வகையில் வேளாண்மை பொறியியல் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.
இதன்படி கிராமம், கிராமமாக சென்று விவசாய கருவிகளை பயன் படுத்தும் விதம் பற்றியும், அதன் நன்மை பற்றியும் செயல்முறை விளக்கம் செய்து வருகின்றனர். நேற்று சுசீந்திரத்தை அடுத்த கற்காட்டில் செயல்முறை விளக்கம் நடைபெற்றது. இதில் திருநெல்வேலி வேளாண்மை பொறியியல் கண்காணிப்பு பொறியாளர்  ராமசாமி, செயற்பொறியாளர் ஆனந்தராஜா,  தக்கலை உதவி செயற்பொறியாளர் கோலப்பபிள்ளை, உதவிப் பொறியாளர் பலாகிருஷ்ணன், வேளாண்மை இணை இயக்குநர் நாகமணிப்பிள்ளை, கலெக்டரின் நேர்முக உதவியாளர் போஸ்லின் உள்பட பலர் கலந்து கொண்டனர்.
நிகழ்ச்சியில் ஒரு மணி நேரத்தில் ஒரு ஏக்கர் நடவு செய்யும் இயந்திரம் மூலம் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் 8 மணி நேரத்தில் 2 ஹெக்டேருக்கு குறைவாக நடவு செய்யும் இயந்திரம், 2 ஹெக்டேருக்கு அதிகமாக நடவு செய்யும் இயந்திரம் பற்றியும் இயந்திரங்களை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், கருவிகளின் விலை மற்றும் அரசு வழங்கும் மானியம் பற்றியும் விளக்கி கூறப்பட்டது.

## மாவட்ட கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலைக்கு மாத விலை நிர்ணயம்

மஞ்சூர், :  மாவட்ட கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலைக்கு மாத விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. மாவட்டம் முழுவதும் சுமார் 64 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறு குறு விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில் 16 கூட்டுறவு ஆலைகளும் 100க்கு மேற்பட்ட தனியார் ஆலைகளும் இயங்கி வருகின்றன.
கூட்டுறவு ஆலைகளில் மட்டும் 22 ஆயிரம் விவசாயிகள் உறுப்பினர்களாக இருந்து தங்களது தோட்டங்களில் பறிக்கப்படும் பசுந்தேயிலையை ஆலைகளுக்கு வினியோகம் செய்து வருகின்றனர். விவசாய உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலைக்கு மாதம் ஒரு முறை குன்னூரில் உள்ள இன்ட் கோ சர்வ் மூலம் மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டு கூட்டுறவு ஆலைகள் மூலம் விவசாயிகளுக்கு பசுந்தேயிலைக்கான தொகை வழங்கப்படுகிறது.
இந்நிலையில், கடந்த செப்டம்பர் மாதம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கு மாத விலை நிர்ணயம் செய்வது தொடர்பான கூட்டம் குன்னூர் இன்ட் கோ

சர்வில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
இன்ட் கோ சர்வ் அதிகாரிகள், அனைத்து கூட்டுறவு ஆலைகளின் தனி அலுவலர்கள் பங்கேற்ற இக்கூட்டத்தில் பசுந்தேயிலைக்கான மாத விலை நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி மாவட்ட கூட்டுறவு ஆலைகளில் அதிகபட்சமாக கூடலூர் சாலீஸ்பரி கூட்டுறவு தொழிற்சாலை மற்றும் பந்தலூர் கூட்டுறவு தொழிற்சாலையில் பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.16 மற்றும் கூடுதல் விலையாக ஒரு ரூபாய் சேர்த்து ரூ.17 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
மஞ்சூர்ல பிக்கட்டி, எடுக்காடு (குந்தா) மேற்கு நாடு, கைகாட்டி, மகாலிங்கா பிரான்டியர், கரும்பாலம், பிதர்காடு ஆகிய கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.16 ஆகவும் மற்றும் கிண்ணக்கொரை, பித்தலார் எப்பநாடு கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.15.50 ஆக மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
இந்த விலையானது தமிழக அரசின் கூடுதல் விலை 2 ரூபாயுடன் சேர்த்தே வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தேயிலை மகசூல் கடும் பாதிப்பு

கடந்த இரு மாதங்களாகவே கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலைக்கு வழங்கப்படும் விலை ஓரளவு உயர்ந்து வரும் நிலையில் குந்தா உள்பட மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் மழையற்ற வறண்ட வானிலை காரணமாக தேயிலை மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
இதனால் தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து பல மடங்கு குறைந்து போயுள்ளதால் கூட்டுறவு ஆலைகளுக்கு குறைந்த அளவிலான பசுந்தேயிலையை விவசாயிகள் வினியோகித்துள்ளனர்.
விலை உயர்ந்த போதும் தேயிலை வரத்து இல்லாததால் விவசாயிகள் மத்தியில் கவலை ஏற்படுத்தியுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

06.10.2012 A.M

**காவிரி டெல்டா பகுதியை நேரில் பார்வையிட்ட**
**மத்திய குழுவினரிடம் விவசாயிகள் க ணீர்**
**"சம்பா பயிரை கா பாற்ற நடவடிக்கை எடுங்கள்"**

தஞ்சாவூர், அக்.6—

காவிரி டெல்டா பகுதியை நேரில் பார்வையிட்ட மத்திய நிபுணர் குழுவினரிடம் சம்பா பயிரை கா பாற்ற நடவடிக்கை எடுக்க வே டும் என்று விவசாயிகள் க ணீர் மல்க கூறினர்.

மத்திய நிபுணர் குழு வருகை

காவிரி டெல்டா மாவட்டங்களில் அக்டோபர் 15—ந் தேதிக்கு பின்பு சம்பா சாகுபடிக்கு தேவையான த ணீரின் அளவு குறித்து ஆய்வு செய்ய மத்திய ர்வள ஆணைய தலைமை பொறியாளர் ஆர்.கே.கு தா தலைமையில் மத்திய ர்வள ஆணைய இயக்குநர் (க காணி பு) கோவை டி.கே.சிவராஜன், க காணி பு பொறியாளர் வீரேந்திரசர்மா, துணை இயக்குநர் (பாசன திட்டம்) பிரதீ தாகூர் ஆகிய 4 பேர் அடங்கிய மத்திய நிபுணர் குழுவினர் நேற்று பிற்பகல் தஞ்சை—திருச்சி மாவட்ட எல்லையான கல்லணைக்கு வந்தனர்.

அங்கு பொது பணித்துறைக்கு சொந்தமான விருந்தினர் மாளிகையில் மத்திய நிபுணர் குழுவினரை கலெக்டர் பாஸ்கரன் மற்றும் பொது பணித்துறை, வேளா மைத்துறை அதிகாரிகள் வரவேற்றனர்.

விவசாயிகள் சந்தி பு

பின்பு அதிகாரிகளிடம் தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி இந்த ஆ டு எவ்வளவு நடைபெற்றது? சம்பா சாகுபடிக்கு தேவையான த ணீரின் அளவு எவ்வளவு? போன்ற பல்வேறு தகவல்கள் குறித்து மத்திய குழுவினர் ஆய்வு நடத்தினர். இந்த ஆய்வுக்கு பின்பு திருச்சி விவசாயிகள் அய்யாக்க ணு, புலியூர்நாகராஜன், ரவி, சக்தீஸ்வரன், சிவசூரியன் ஆகியோர் மத்திய குழுவினரை நேரில் சந்தித்து தங்களது கோரிக்கைகளை தெரிவித்தனர்.

அ போது விவசாயிகள், "குறுவை சாகுபடி பொய்த்துவிட்டது. கர்நாடக மாநிலத்தில் இருந்து காவிரியில் க டி பாக த ணீர் திறந்துவிட்டால் தான் சம்பா சாகுபடியை கா பாற்ற முடி ம். விவசாயிகள் தற்கொலை நிலைக்கு செல்லாமல் உங்களால் தான் தடுக்க முடி ம். ங்கள் காவிரி டெல்டா விவசாயிகளின் நிலைமைகளை பிரதமரிடமும், காவிரி நதி ர்

ஆணைத்திடமும் தெரிவிக்க வே டும்” என்று மத்திய நிபுணர் குழுவினரிடம் தெரிவித்தனர்.

மேலும் குறுவை சாகுபடி செய்ய படாததால் ரூ.1,000 கோடிக்கு இழ பு ஏற்பட்டுள்ளது. காவிரி த ணீரை நம்பி தொடங்க பட்ட சம்பா சாகுபடி ம் பொய்த்துவிட்டால் ரூ.60 ஆயிரம் கோடி இழ பு ஏற்படும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்த மத்திய நிபுணர் குழுவினர், உங்களது கோரிக்கைகளை க டி பாக பிரதமரிடம் தெரிவி போம் என்று உறுதி கூறினர்.

வயல்களில் ஆய்வு

பின்பு கல்லணையில் இருந்து மத்திய ர்வள ஆணைய தலைமை பொறியாளர் ஆர்.கே.கு தா தலைமையில் மத்திய நிபுணர் குழுவினர் காவிரி டெல்டா பகுதி விளை நிலங்களை பார்வையிடுவதற்காக காரில் புற பட்டனர். காரில் இருந்தபடியே கல்லணையில் இருந்து காவிரி, வெ ணாறு, கொள்ளிடம் ஆறுகளில் குறைவான அளவு செல்லும் த ணீரை பார்வையிட்டனர். பின்பு காவிரி டெல்டா மாவட்டத்தின் முதல் பாசன பகுதியான பாதிரக்குடிக்கு சென்ற மத்திய நிபுணர் குழுவினர் அங்கு சாகுபடி பணியே மேற்கொள்ளாமல் பாலைவனம் போல் காட்சி அளித்த விளைநிலங்களை பார்வையிட்டனர்.

பின்பு சிய்யாமங்களம், மகாதேவபுரம் வழியாக கச்சமங்கலத்திற்கு மத்திய நிபுணர் குழுவினர் காரில் சென்று கொ டிருந்தனர். வழியில் கச்சமங்கலத்தைச் சேர்ந்த கணவன்–மனைவியான ராய பன், ராணி ஆகியோர் மத்திய குழுவினரிடம், “இந்த ஆ டு குறுவை சாகுபடி செய்யவில்லை. சம்பா சாகுபடி செய்வதற்காக நாற்றங்கால் விட விதைநெல் 3 நாட்களுக்கு முன்பு வாங்கி வந்தேன். ஆனால் த ணீர் வயலுக்குள் செல்லும் அளவுக்கு வாய்க்காலில் வரவில்லை. இதனால் பாத்திரத்தின் உதவியால் வயலுக்குள் த ணீரை இரைத்துக்கொ டிருக்கிறோம். இந்த த ணீரை வைத்து நாற்றங்காலும் விட முடியவில்லை. இதனால் விதை நெல் காய்ந்துவிட்டது” என்று க ணீர் மல்க கூறினர். அவர்கள் கூறிய கருத்துக்களை கலெக்டர் பாஸ்கரன், மத்திய நிபுணர் குழுவினரிடம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து கூறினர்.

பாலைவனம் போல் காட்சி...

அதை கேட்டறிந்த மத்திய நிபுணர் குழுவினர் பின்பு மேகளத்தூருக்கு சென்றனர். இதையடுத்து அங்கிருந்து காரில் புற பட்டு ஒரத்தூர், வி ணமங்கலம் வழியாக பூதலூருக்கு சென்ற மத்திய நிபுணர் குழுவினர் அங்கு நேரடி நெல் விதை பு செய்ய பட்டிருந்த வயல்களை நேரில் பார்வையிட்டனர். அ போது சில விவசாயிகள் மத்திய நிபுணர் குழுவினரை சந்தித்து, “குறுவை சாகுபடி பொய்த்துவிட்டது. சம்பா சாகுபடி செய்யலாம் என்ற நம்பிக்கையில் நேரடி நெல் விதை பு செய்து இருக்கிறோம். தற்போதுள்ள த ணீர் இந்த சாகுபடிக்கு போதாது. கர்நாடகத்தில் இருந்து த ணீர் வந்தால் தான் சாகுபடி முழுமை பெறும். எனவே அதற்கு ஏற்றார்போல் கர்நாடக அரசு த ணீர் தருவதற்கு ஏற்பாடு செய்ய வே டும்” என்று கூறினர்.

விவசாயிகளின் கருத்துக்களை மத்திய நிபுணர்கள் குழுவினர் எழுதிக்கொ டனர். அ போது ங்கள் எவ்வளவு ஏக்கரில் சம்பா சாகுபடி மேற்கொ டு இருக்கிறீர்களோ? அவை அனைத்தை ம் இன்சூரன்ஸ் செய் ங்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பின்பு அங்கிருந்து புற பட்ட மத்திய நிபுணர் குழுவினர் சித்திரக்குடி, கோவில்பத்து, கள்ள பெரம்பூர் பகுதிகளில் சாகுபடி பணி மேற்கொள்ள படாமல் பாலைவனம் போல் காட்சி அளிக்கும் வயல்வெளிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பின்பு இரவு தஞ்சையில் ஓய்வு எடுத்தனர்.

முன்னதாக மத்திய ர்வள ஆணைய தலைமை பொறியாளர் ஆர்.கே.கு தா நிருபர்களிடம் கூறும்போது, நாங்கள் தொழில்நுட்ப வல்லுநர் குழு, மத்திய ர்வள ஆணையத்தின் ஆணை படி காவிரி டெல்டா பகுதிகளில் ஆய்வு செய்ய வந்துள்ளோம். இந்த ஆய்வு அறிக்கையை மத்திய ர்வள ஆணையத்திடமும், மத்திய அரசிடமும் விரைவில் சமர் பி போம் என்று கூறினார்.

ஆய்வின்போது கலெக்டர் பாஸ்கரன், திருச்சி ம டல தலைமை பொறியாளர் கணேசமாறச்சன், க காணி பு பொறியாளர்கள் மனோகரன், தமிழரசன் மற்றும் பலர் உடன் சென்றனர்.

திருவாரூர்–நாகை

இன்று (சனிக்கிழமை) தஞ்சையில் இருந்து காரில் புற படும் மத்திய நிபுணர் குழுவினர் திருவாரூர் மாவட்டம் வடுவூர் வழியாக மன்னார்குடி, முத்து பேட்டை, திருத்துறை பூ டி, திருவாரூர் பகுதிகளில் சம்பா சாகுபடி பணிகளை பார்வையிடுகின்றனர். பின்பு இரவு நாகை மாவட்டம் வேளாங்க ணியில் மத்தியநிபுணர் குழுவினர் தங்குகின்றனர். பின்பு நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை வேளாங்க ணியில் இருந்து புற பட்டு நாகை, சீர்காழி பகுதிகளை மத்திய நிபுணர் குழுவினர் பார்வையிடுகின்றனர்.

கர்நாடக அணை பகுதிகளில் ஆய்வு

இதே போல், கர்நாடகத்துக்கு சென்ற மற்றொரு மத்திய குழுவினர் பெங்களூரில் கர்நாடக அரசின் முதன்மை செயலாளர் எஸ்.வி.ரங்கநாத், ர்வளத்துறை மற்றும் வேளா மைத்துறை அதிகாரிகள் மத்திய குழுவினரிடம் அணைகளில் உள்ள ர் இரு பு நிலவரம், போதிய மழை பெய்யாததால் ஏற்பட்டுள்ள பாதி பு, பெங்களூருக்கு தேவைபடும் குடி ர் அளவு போன்றவை குறித்து விரிவாக எடுத்து கூறினார்கள்.

அதைத் தொடர்ந்து மத்திய குழுவினர் நேற்று ஹெலிகா டரில் மைசூர் புற பட்டு சென்றனர். அ போது கிருஷ்ணராஜ சாகர், கபினி அணைகள் மற்றும் ஹேமாவதி நதி பகுதிகளில் ஹெலிகா டரில் பறந்து ஆய்வு நடத்தினார்கள். அ போது அணைகளின் ர்மட்டம், ர் இரு பு நிலவரம், அணைகளுக்கு ர்வரத்து, பாசன பயன்பாடு குறித்து ஆய்வு செய்தனர்.

பின்னர் மைசூர் சென்றடைந்த மத்திய குழுவினர் அங்கு இருந்து கார் மூலம் பா டவபுரா பகுதியில் உள்ள ராமனஹள்ளி, மகாதேவபுரா, ம டியா, கொ பாலு, ஏலகெரே உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு பணியை தொடங்கினார்கள். பின்னர் கிருஷ்ணராஜ சாகர் அணை பகுதியில் ஆய்வு செய்தனர். மேலும் அணைகள் உள்ள கிராம பகுதிகளிலும் ஆய்வு நடத்தினார்கள்.

மேலும் ஹாசன் பகுதியில் இன்று (சனிக்கிழமை) ஆய்வு நடத்த திட்டமிட்டுள்ளதாக அதிகாரி ஜேக்க தெரிவித்தார். மத்திய குழுவினர் தங்கள் ஆய்வு அறிக்கையை வருகிற 11–ந் தேதி பிரதமர் மன்மோகன்சிங்கிடம் தாக்கல் செய்வார்கள் என்று தெரிகிறது.

**தமிழ்நாட்டுக்கு பெரும் மழையை கொடுக்கும்**
**வடகிழக்கு பருவமழை தொடங்குவது எ போது?**
**வானிலை அதிகாரி பதில்**

சென்னை, அக்.6–

தமிழ்நாட்டுக்கு பெரும் மழையை கொடுக்கும் வடகிழக்கு பருவமழை தொடங்குவது எ போது என்று கேட்டதற்கு வானிலை அதிகாரி பதில் அளித்தார்.

மழை பொய்த்தது

இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் தென்மேற்கு பருவ மழைக்காலத்தில்தான் பெரும்பாலான மழையை பெறுவது உ டு. ஆனால் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழைக்காலத்தில்தான் பெரும்மழை பெறுகிறது. தென்மேற்கு பருவமழைக்காலத்தில் குறைந்த மழைதான் கிடைக்கும்.

கடந்த வருடம் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தென்மாவட்டங்களில் பொய்த்துவிட்டது. அணைகள்பகுதியிலும், அணைகளுக்கு த ணீர் வரக்கூடிய பகுதிகளிலும் மழைபோதிய அளவுக்கு பெய்யாததால் அணைகள் நிரம்பவில்லை. இதனால் விவசாயம் பாதிக்க பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் மத்திய பகுதிகளில் அதாவது திருச்சி, நாகை, கடலூர், விழு புரம் முதலிய மாவட்டங்களில் கடந்த வாரம் மழைபெய்தது. இதனால் அந்த பகுதி மக்கள் சற்று திரு தி அடைந்தனர்.

வடகிழக்கு பருவமழை

தமிழ்நாடு முழுவதும் குறி பாக தென்மாவட்டங்களில் எ போது வடகிழக்கு பருவமழைபெய் ம். விவசாய வேலைகளை தொடங்கலாம் என்று விவசாயிகள் காத்திருக்கிறார்கள்.

எ போது தென்மேற்கு பருவமழை முடிந்து, வடகிழக்கு பருவமழை பெய்யத்தொடங்கும்? என்று சென்னையில் உள்ள வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரியிடம் கேட்டதற்கு அவர் அளித்த பதில் வருமாறு:–

வழக்கமாக வடகிழக்கு பருவமழை தமிழ்நாட்டில் அக்டோபர் மாதம் 20–ந்தேதியையொட்டி தொடங்கும். 20–ந்தேதிக்கு சற்று முன்னதாகவும் தொடங்கலாம் சற்று பின்னாலும் தொடங்கலாம். தென்மேற்கு பருவமழை முடிந்த மறுநாள், வடகிழக்கு பருவமழை தொடங்கும் என்று சொல்லலாம். எ படி ம் சராசரியாக பார்த்தால் வடகிழக்கு பருவமழை தொடங்க இன்னும் 15 நாட்களே உள்ளன.

வெயில்

தமிழ்நாட்டில் கடந்த 2 நாட்களாக வெயில் அடித்து வருகிறது. அதுவும் நெல்லை போன்ற இடங்களில் வெயில் அதிக காட்டத்துடன் கோடை போல அடிக்கிறது.

இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை அதிகாரி கூறியதாவது:–

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று ஒரு சில இடங்களில் மழைபெய் ம். சென்னையில் மாலை அல்லது இரவு மேகங்கள் திரளும்.

இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

**பால் அட்டை தாரர்களுக்கு தள்ளுபடி விலையில் வெ ணெய்–நெய்**
**ஆவின் நிறுவனம் அறிவி பு**

சென்னை,அக்.6–

ப டிகை காலத்தையொட்டி ஆவின் மாதாந்திர பால் அட்டைதாரர்களுக்கு சிற பு தள்ளுபடிவிலையில் வெ ணெய், நெய் வழங்க பட உள்ளது. இந்தசிற பு தள்ளுபடி ஆவின் 16 வட்டார அலுவலகங்களில் விற்க படும் அரைகிலோ வெ ணெய்க்கு 3 ரூபா ம், ஒரு லிட்டர் நெய்க்கு 5 ரூபா ம் அரை லிட்டர் நெய்க்கு 3 ரூபா ம் அதிக பட்ச சில்லறை விற்பனை விலையில் சிற பு தள்ளுபடி செய்ய படும். இந்த சலுகை வட்டார அலுவலகங்களில் விற்க படும் வெ ணெய் மற்றும்நெய்க்கு மட்டுமே பொருந்தும்.

ப டிகை காலங்களில் ஆவின் பால்பொருட்களை மொத்தமாக வாங்க விரும்புபவர்கள் சென்னையில் உள்ள ஆவின் நந்தனம் அலுவலகத்தில் முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ள சிற பு ஏற்பாடுசெய்ய பட்டுள்ளது.

இந்த தகவலை ஆவின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.